முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (14.08.2025) அன்று தலைமைச் செயலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கத்தில் ரூபாய் 1 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள பாரா விளையாட்டு மைதானத்தை காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டை அண்ணா விளையாட்டரங் கத்தில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ் உள்பட பலர் உள்ளனர்.

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி மேலிருப்பு ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ம.க., பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 500 பேர், ஆண், பெண் நிர்வாகிகள், பா.ம.க நிர்வாகி அ.பாபு தலைமையில் சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ, முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். சபா.பாலமுருகன், அ.குணசேகரன், ராஜா, அறிவழகன், ஆடலரசு, செல்வகுமார், ஐயப்பன், ஜெகநாதன், வீர.இராமச்சந்திரன், தினகரன், அரிதாஸ், அன்பழகன், சத்தியராஜ், பண்ருட்டி தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் – சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

விருதுநகர், ஆக.16-

மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விருதுநகர் வடக்கு மாவட்டக் கழக கூட்டம் நாளை (16.08.2025 -சனிக் கிழமை) காலை 10.00 மணியளவில், மல்லாங்கிணர், இராஜாமணி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் வி.தங்கராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள்/நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்/துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள், கிளைக்கழகச் செயலாளர்கள்/பிரதிநிதி கள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளட்ட கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை சம் மந்தமாக

2. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நாகலாந்து ஆளுநர் இல.கணேசன் மறைவு!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இரங்கல்!

சென்னை, ஆக.16-

நாகாலாந்து ஆளுநரும், தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. கொள்கைகளைப் பரப்பிய முக்கிய கொள்கையாளருமான நண்பர் இல. கணேசன் அவர்கள் (வயது 80) மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று மறைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம்.

கொள்கையில் நேர் எதிரானவர்களான நாங்கள் இருவரும், நட்பில் நல்ல நண்பர்கள் என்பதை அவரது குடும்ப உறுப்பினர்கள் கூட நன்கு அறிவர். கொள்கை வேறு; பண்பாடு நட்பு வேறு.

மேடையில் பேசினாலும் நனி நாகரிகத்துடன் பேசி எவரிடத்திலும் அப்படியே நடந்து கொள்ளும் நல்ல மனிதர்.

அவரது மறைவு அவரது குடும்பத்தாருக்கும், அவரது இயக்கக் கொள்கையாளர்களுக்கும் மட்டும் இழப்பல்ல. பண்பான அரசியல் பொதுவாழ்வுக்கும் ஒரு பெரும் இழப்பு!

அவரது மறைவுக்கு நமது ஆழ்ந்த இரங்கலையும், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய திருநாட்டின் 79வது சுதந்திர தினம்!

காஞ்சிபுரம் சட்டமன்ற அலுவலகத்தில் மூவர்ணக் கொடியேற்றி - இனிப்பு!

சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஆக. 16-

இந்திய திருநாட்டின் 79 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, நேற்று (15.08.2025) சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளரும், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி. எழிலரசன் மூவர்ண கொடி ஏற்றி, மரியாதை செலுத்தி அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

நிகழ்வில், மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே. ஆறுமுகம், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், பகுதிக் கழக செயலாளர்கள் கே. திலகர், எஸ். சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், ஒன்றியச் செயலாளர்கள் பி.எம். குமார், பி.எம். பாபு, தலைக் கழக செயற்குழு உறுப்பினர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ. யுவராஜ், கழக அணிகளின் நிர்வாகிகள் வி.எஸ். ராமகிருஷ்ணன், நாத்திகம் நாகராஜன், தி. இராம்பிரசாத், பி.எம்.நீலகண்டன், எம். வேல்முருகன்,

பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.வினோத்குமார், பி. எஸ். குடியரசு, ப.தனலட்சுமி, வி.பகவான், எஸ். எழில்குமார், எல்லப்பன், கோவிந்தராஜ், வி.ராம மூர்த்தி, பாலமுருகன், அய்யாவு, அருணாச்சலம், சௌந்தர்ராஜன், லட்சுமணன், பழனிவேலு, மாமன்ற உறுப்பினர்கள் அஸ்மாபேகம், நிர்மலா பிரகாசம், இலக்கியா சுகுமார், ஆர்.மல்லிகா, எஸ்.கௌதமி, ஏ.சரவணன், ப. சுரேஷ், சரஸ்வதி பாலமுருகன், பூங்கொடி தசரதன், தேவராஜ், வட்ட செயலாளர்கள் சாகுல் அமீது, க. செல்வம், எஸ். செந்தில், கே.சண்முகம், எஸ்.வரதன், பார்த்திபன், மண்டி சம்பத், சங்கர், மோகன், சரவணன், பிரசாந்த், பழனி, ஜெகதீசன், சரவணகுமார், காமராஜ், தயாளன்,

ஒன்றியக் கழக நிர்வாகிகள் பி.என்.ரவி, பூவரசன், நிர்மல்குமார், மணி, வெங்கட்ராமன், ஜெயபால், ரமேஷ், புலமைபித்தன், முனிரத்தினம், ராமன், திருநாவுக்கரசு, கிளை கழக செயலாளர்கள் டி.கே.ராமன், நடராஜ், ஏழுமலை மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்திய திருநாட்டின் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, நேற்று (15.08.2025) சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளரும், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி. எழிலரசன் மூவர்ண கொடி ஏற்றி, மரியாதை செலுத்தி அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

இந்திய நாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழா தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4 ல் மண்டல குழு தலைவர் டி .காமராஜர் கொடியேற்றி வைத்து சிறப்புரை ஆற்றினார். இதில் மாநகர நியமன குழு தலைவர் எஸ். சேகர் எம். சி, கணக்கு குழு உறுப்பினர் பி .புகழேந்தி எம் .சி, மாமன்ற குழு கொறடா டி .ஆர் .கோபி, எம் .சி., மாமன்ற உறுப்பினர்கள் சுரேஷ், லிங்கேஸ்வரி ,பாபு, பெரியநாயகம், ராஜேஸ்வரி, சங்கர், மதுமிதா ,மதன், திருமதி ஏமாவதி சேகர், பொறியாளர் தங்கதுரை, சுகாதார ஆய்வாளர் சிவகுமார், மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஜம்மு-காஷ்மீரில் வெள்ளப் பெருக்கு:

மேகவெடிப்பு பலி 46 ஆக உயர்வு!

300 பேர் மாயம்!

டேராடூன். ஆக.16-

உத்தரகாண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தைத் தொடர்ந்து, ஜம்மு-காஷ்மீரில் மேக வெடிப்பால் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி 46 பேர் பரிதாபமாக உயிரிழந்த நிலையில், மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. உத்தரகண்ட் மாநிலம், இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட மேகவெடிப்பு பேரழிவுகளைத் தொடர்ந்து, தற்போது ஜம்மு-காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் உள்ள சோசிட்டி கிராமத்தில் மேகம் வெடித்து பெரும் துயரம் நிகழ்ந்துள்ளது.

இந்த கோர சம்பவத்தில் இதுவரை 46 பேர் உயிரிழந்துள்ளனர், அவர்களில் இருவர் மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படை வீரர்கள் ஆவர். மேலும், 160 பேர் காயமடைந்துள்ள நிலையில், 300க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை. மாநில முதல்வர் உமர் அப்துல்லா, இதுகுறித்து உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம் நிலைமையை விளக்கியுள்ளார். இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள ஒவ்வொரு உயிரையும் மீட்க மீட்புப் படையினர் பல மணி நேரமாகப் போராடி வருகின்றனர். ஆனால், தொடர் மழையும், சேறும் மீட்புப் பணிகளுக்குப் பெரும் தடையாக உள்ளன. மேக வெடிப்பால் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கும், சகதி மற்றும் இடிபாடுகளும் கிராமத்தையே சிதைத்துள்ளன.

விபத்து நடந்த பகுதிகளில் ரத்தக் கறையுடன் உடல்கள் சிதறிக் கிடக்கின்றன. மருத்துவமனைகள் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகின்றன. ராணுவம், காவல்துறை மற்றும் உள்ளூர் மக்கள் காயமடைந்தவர்களைத் தோளில் சுமந்து, சேறு நிறைந்த பாதைகள் வழியே மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்கின்றனர்.

தூய்மைப் பணியாளர்களின் சுயமரியாதையை பொறுப்புடன் பேணிக்காக்கும் அரசு நமது "திராவிட மாடல்" அரசு!

மாண்பைக் காக்கும் முதல்வரின் அறிவிப்பை ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது!

ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் – தலைவர் இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, ஆக.16-

"எளியோரிலும், வலியோராக இருக்கும் தூய்மைப்பணியாளர்களின் மாண்பை எப்போதும் விட்டுக்கொடுக்காது" என்பதை அமைச்சரவை கூட்டத்தின் மூலம் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நலன் காக்கும் அறிவிப்பினை ஆதித்தமிழர் பேரவை மனதார வரவேற்கிறது.

சாதியின் நிர்பந்தத்தால் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் மீது திணிக்கப்பட்ட தொழிலான தூய்மைப் பணி என்பது இழி தொழிலாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அது மனித மாண்பிற்கு எதிரான கூர்தீர்த்தப்பட்ட சவாலாகும்.

இந்த மனித மாண்பை பகுத்தறிவாலும் நவீனத்தாலும் மீட்க முடியுமே தவிர அவர்களை தூய்மைப் பணிக்கு நிரந்தரப்படுத்தி மலர் தூவி, கால் கழுவி புனிதப்படுத்தி மீட்டு விட முடியாது.

இன்றைக்கு நவீன தொழில்நுட்பத்தை நம் கைகளுக்குள் அடக்கிக் கொண்டாலும் "தூய்மை பணி நிரந்தரம்" என்ற புறவாசல் வழி தீண்டாமை நுழைவதை அறிவுடையோர் கண்டிக்க கடமைப்படுவார்கள்.

அர்ச்சகரும் வேண்டாம்.

தனியாரும் வேண்டாம்.

தூய்மைப் பணியாளரும் வேண்டாம்.

என்ற சிந்தனையோடு புதிய கருவிகளையும் நவீன தொழில்நுட்பங்களையும் பயன்பாட்டுக்கு கொண்டு வந்து மேலை நாடுகளைப் போல் தனி நபர் மற்றும் பொதுச் சுகாதாரத்தை, தான் பார்த்துக் கொள்வதைப் போல் நம் நாட்டில் இருக்கும் பொதுச் சுகாதாரத்தையும் தூய்மைப்பணியையும் பேணிகாக்க ஒவ்வொரு நபரும் பொறுப்பேற்க வேண்டும் என்ற சிந்தனை புகுத்தப்படுவது காலத்தின் அவசியம். மனிதனை வைத்து மனிதன் இழுத்த கை வண்டி ரிக்சாவை ஒழித்து சுயமரியாதையை மீட்ட தலைவர் கலைஞர் அவர்கள்.

தற்போது திமுக அரசுக்கு எதிராக சிலர் ரிப்பன் பில்டிங் அருகே தூய்மைப் பணியாளர்களை வைத்து போராட்டத்தை கூர்மைபடுத்திருக்கிறார்கள்.

மனித மலக்கழிவும் ஒவ்வாத குப்பைகளையும் முடைநாற்றமெடுக்கும் கழிவுகளையும் அப்புறப்படுத்தும் தூய்மைப் பணியை மனிதனை வைத்து தான் நிரந்தரமாக பணி செய்ய வேண்டும் என நிர்பந்திக்கும் தலைவர்கள் செயற்பாட்டாளர்கள் தங்களை ஒரு முறை பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

தற்போது தூய்மைப் பணியில் ஈடுபடுகின்றவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நலன் காக்கும் திட்டங்களை முதல்வர் அவர்கள் தெரிவித்திருப்பது ஆறுதல் அளிக்கின்ற நடவடிக்கையாகும்.

இருந்தபோதிலும் இந்த போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும். வரும் காலங்களில் மனிதனின் மாண்பை பாதுகாக்கின்ற வகையில் பொதுச் சுகாதாரம்.தூய்மைப் பணி என அனைத்திற்கும் புதிய புதிய கண்டுபிடிப்புகள் மூலம் நவீன இயந்திரங்களை இறக்குமதி செய்து மலக்குழி மரணத்தை தடுப்பதும் பொதுச் சுகாதாரம் மற்றும் தூய்மைப்பணி யிலிருந்து மனிதனை முழுவதும் விடுவித்து மாண்பையும் சுயமரியாதைதையும் பாதுகாக்க வேண்டும் என ஆதித் தமிழர் பேரவை சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் தலைவர் இரா.அதியமான் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

தே.மதியழகன் எம்.எல்.ஏ. தாயார் கண்ணம்மாள் தேவராஜ் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.16-

சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் அவர்களின் தாயார் மறைவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

பர்கூர் சட்டமன்ற உறுப்பினரும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான தே. மதியழகன் அன்புத் தாயார் திருமதி. கண்ணம்மாள் தேவராஜ் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

அன்பு செலுத்தி, அரவணைத்து, ஆளாக்கி அகமகிழ்ந்த அன்னையின் மறைவால் வாடும் மதியழகன் எம்.எல்.ஏ. அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு எனது ஆறுதலைத் தெரிவித்தேன்.

அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ்.பி. பச்சையப்பன்

ஆகஸ்ட் 16 (2022)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

1964ஆம் ஆண்டு கள்ளக்குறிச்சி வட்டச் செயலாளராகவும், அதனை தொடர்ந்து 1991 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1967ல் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

ஒன்றிய பெருந்தலைவராகவும் , பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் இருந்தவர்.

1964ல் கடலூரில் இந்தி எதிர்ப்பு அறப்போரில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.